Judicial Form No.53

(See Rule 43)

# DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II POLLACHI

| | | | |
|---|---|---|---|
| CALENDAR | Case No. | : | CC 73/2017 |
| MISCELLANEOUS | | | |
| Preliminary Register | Sessions | : | |
| | Prosecution | : | PW9 |
| Deposition of Witness for | Defence | : | |
| | Court | : | |

| | | |
|---|---|---|
| Name | – | சோமசுந்தரம் |
| Father's Name | – | |
| Village | -- | |
| Taluk | -- | |
| Caste | -- | |
| Calling | -- | |
| Religion | -- | |
| Age | -- | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act of 1969 (Central Act 44 of 1969) on the 04th March 2026

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் கூறுவதாவது

Accused absent. 317 Petition filed and allowed. Accused counsel present.

**முதல் விசாரணை** :

நான் தற்போது குடிமைப் பொருள் வழங்கல் குற்ற புலனாய்வு துறையில் கோயமுத்தூர் அலகில் காவல் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். இதற்கு முன்னர் ஆனைமலை வட்ட காவல் ஆய்வாளராக பணியில் இருந்தபோது, ஆழியார் காவல்நிலைய பொறுப்பு காவல் ஆய்வாளராக பணியாற்றியபோது, ஆழியார் காவல்நிலைய குற்ற எண்.2/2017, சட்டப்பிரிவுகள் 279, 304A இதசவின் பதிவு செய்யப்பட்ட வழக்கின் கோப்பினை புலன் விசாரணைக்காக எனது பார்வைக்கு வைத்ததை நான் புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு, அன்றைய தினமே காலை 08.30 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் சின்னத்துரை மற்றும் பூபதி ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். அவைகள் முறையே **அ.சா.ஆ.6** மற்றும் **அ.சா.ஆ.7** ஆகும். பின்னர் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 5 வரையிலானவர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

பின்னர் வழக்கின் இறந்துபோன பாக்கியம் என்பவரின் பிரேதத்தின் மீது சாட்சிகள் வேலுச்சாமி, சாந்தகுமார், சபரிகிரி, ஈஸ்வரன் ஆகியோர்கள் முன்னிலையில் பிரேத விசாரணை மேற்கொண்டேன். அந்த பிரேத விசாரணை அறிக்கை **அ.சா.ஆ.8** ஆகும். பின்னர் பட்டியல் சாட்சிகள் 6 முதல் 10 வரையிலானவர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

பின்னர் வழக்கில் சம்பந்தப்பட்ட TN 30 BZ 1001 Toyota Innova என்ற நான்கு சக்கர வாகனத்தை மோட்டார் வாகன ஆய்விற்கு அனுப்பி, மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.உலகநாதன் அவர்களை விசாரித்து வாக்குமூலமும் அவர் அளித்த மோட்டார் வாகன ஆய்வறிக்கையும் பெற்றேன்.

பின்னர் இவ்வழக்கின் இறந்துபோன பாக்கியம் என்பவரின் பிரேத்தின் மீது பிரேத பரிசோதனை செய்த மருத்துவர் பூரணி அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, அவர் அளித்த பிரேத பரிசோதனை அறிக்கையை பெற்றேன். அந்த பிரேத பரிசோதனை அறிக்கை **அ.சா.ஆ.9** ஆகும்.

பின்னர் வழக்கின் எதிரி நிலையத்தில் ஆஜரானவரை காரணம் கூறி கைது செய்து நிலைய பிணையில் விடுவித்தேன். பின்னர் இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சிறப்பு உதவி ஆய்வாளர் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் இத்துடன் எனது புலன் விசாரணை முடித்து எதிரிக்கெதிராக மேற்படி சட்டப்பிரிவுகளின் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

சம்பவம் நடந்த இடத்திலிருந்து காவல்நிலையம் சுமார் 7 கி.மீட்டர் தூரத்தில் உள்ளது என்றால் சரிதான். சம்பவம் நடைபெற்று ஒருநாள் கழித்துதான் புகார் கொடுக்கப்பட்டது

என்றால் சரியல்ல, சம்பவம் 01.01.2017 ம் தேதி இரவு 07.00 மணிக்கு நடந்தது, புகார் 02.01.2017 ம் தேதி காலை 07.15 மணிக்கு கொடுக்கப்பட்டது. மேற்படி புகாரில் இனோவா காரின் ஓட்டுநர் பெயர் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான், வாக்குமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. விபத்தில் அடிப்பட்ட பெண்ணிற்கு சுமார் 70 வயதிருக்கும் என்றால் சரியல்ல, 60 வயதிருக்கும்.

புகார் கொடுத்த நபர் இறந்துபோன நபரின் மகன் என்றால் சரிதான், அவருக்கு எழுத படிக்க தெரியாது என்றால் சரியல்ல, எழுத தெரியாது, அவர் புகாரை கூறினார், அதை நான் எழுதி படித்து காண்பித்து அவரிடம் கையெழுத்து செய்துள்ளார். புகாரில் எனக்கு எழுத தெரியாது என்று கூறியுள்ளார் என்றால் சரிதான், ஆனால் அவர் சொல்ல சொல்ல புகார் எழுதினோம்.

புகார்தாரர் எந்தவிதமான புகாரும் கொடுக்கவில்லையென்றாலும், மேற்படி புகார் எங்களுடைய தேவைக்கேற்ப எழுதி மாற்றிக் கொண்டோம் என்றால் சரியல்ல. அ.சா.1 சம்பவத்தை நேரில் பார்க்கவில்லையென்று கூறியுள்ளார் என்றால் சரியல்ல. விபத்து ஆழியார் - பொள்ளாச்சி பிரதான சாலையின் அங்கலக்குறிச்சி என்ற இடத்தில் நடைபெற்றது என்றால் சரிதான்.

மேற்படி தென்வடல் ரோட்டை அவர் குறுக்காக கடந்து செல்லும்போதுதான் விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். சம்பவயிடத்தில் உடைந்த கண்ணாடி துகள்கள் இருந்ததா என்றால் இல்லை. சம்பவம் நடைபெற்றவுடனேயே வாகனத்தை ஓட்டி வந்த நபர் மருத்துவமனைக்கு காயம்பட்ட நபரை அழைத்து சென்று முதலுதவி செய்துள்ளார் என்றால் சரிதான். பார்வை மகஜர் சாட்சிகள் இருவரும் இறந்துபோன நபரின் நெருங்கிய நண்பர்கள் என்றால் சரியல்ல, அதே ஊரை சார்ந்தவர்கள்.

அ.சா.4 விபத்து சம்பந்தமாக புகார் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. அ.சா.4 ம் சத்தம் கேட்டு சம்பவயிடம் சென்றதாக எனது விசாரணையில் கூறியுள்ளார் என்றால் சரியல்ல, சம்பவத்தை நேரில் பார்த்ததாக கூறியுள்ளார். அ.சா.5 இறந்துபோன நபருக்கு வயது 75 இருக்கும் கூறியுள்ளார் என்றால் சரியல்ல. அ.சா.6 இந்த வழக்கு சம்பந்தமாக புகார் கொடுத்ததாக கூறியுள்ளார் என்றால் சரியல்ல.

சம்பவம் நடந்து 15 நிமிடத்தில் ஆழியார் காவல்நிலையத்திலிருந்து வந்து விசாரணை செய்தார்கள் என்றால் சரியல்ல. அடிப்பட்ட நபர் இனோவா காரின் அடியில் சிக்கி கொண்டார் என்று வாக்குமூலம் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. எதிரியின் கவனக்குறைவினாலும் அஜாக்கிரதையாலும் விபத்து நடைபெறவில்லையென்றாலும், வயதான அந்த பெண்மணி கவனக்குறைவாக சாலையை குறுக்காக கடந்ததால்தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல.

சொன்ன நேரத்தில் சொன்ன சமயத்தில் புகார் பெறப்பட்டு முதல் தகவல் அறிக்கை

பதிவு செய்யப்படவில்லை என்றும், பார்வை மகஜர், மாதிரி வரைபடம் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்டது என்றும் சம்பவ இடத்திற்கே போகாமல் சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரியின் மீது தவறுதலாக குற்ற அறிக்கை தாக்கல் செய்துள்ளது என்றாலும், எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை** - இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

**(Sd/-. Thiru. E. Pragasam BA.,BL.,)**

Judicial Magistrate No.II,
Pollachi